# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அனைத்துலகத் தேர்வு

# 2013

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 4

நேரம்: 120 மணித்துளிகள்

சுட்டெண்:

மொத்தப்புள்ளிகள் : 100

1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. தமிழ் மொழியிலுள்ள மெய் எழுத்துகள்

____________________.

(30, 18, 12)

2. ஈசன் என்று போற்றப்பட்ட மன்னன் ____________________.

(சங்கிலியன், பண்டாரவன்னியன், இராவணன்)

3. பின்வருவனவற்றுள் ஓட்டு உயிரி ____________________.

(மீன், சுறா, இறால்)

4. ஒருபக்கம் மட்டும் தோற்கண் உள்ள தோற்கருவி

____________________.

( தண்ணுமை, முரசு, உடுக்கு)

5. **பழமொழி :** பதறாத காரியம் ____________________.

(பதறும், சிதறும், சிதறாது)

6. பாடற்போட்டி என்பதைப் பிரித்து எழுதினால்

____________________.

(பாடல் + போட்டி, பாடற் + போட்டி, பாடல்ப் + போட்டி)

7. எல்லாளன் கட்டிய குளங்களில் ஒன்று

____________________.

(கந்தளாய்க்குளம், பண்டாரிக்குளம், வவுனிக்குளம்)

8. செல்வன் நாளை சுற்றுலாச் ________________.

( சென்றான், செல்வான், செல்கிறான்)

9. இராவணனது சிறப்பு இயல்புகளைக் கூறும் நூல்

________________.

( இராவணகாவியம், இராமாயணம், சிலப்பதிகாரம்)

10. முகிலன் நீரை ________________ எனக் குடித்தான்.

( விறுவிறு, மளமள, மடமட)

11. பெரிய இதழ் உள்ள பூ ________________.

( மகிழம்பூ, தாழம்பூ, மல்லிகைப்பூ)

12. தாள் உண்ட நீரைத் தலையால் தருவது

________________.

(தென்னை, கமுகு, வேம்பு)

13. இங்கே பலவகைப் பழங்கள் உள்ளன.

________________ நீ விரும்பியதை எடு.

(அவற்றுள், எவற்றுள், இவற்றுள்)

14. கிளித்தட்டில் முன்புறம் இருந்து இறங்கும் கன்னையரைக்

________________ என்பர்.

(காய், பழம், கிளி)

15. **நொடி:** அந்தரத்திலே பறக்கும் பறவை அல்ல,

அழகான வால் உண்டு அணிலும் அல்ல. அது

________________.

(காகம், பட்டம், கிளி)

16. திருகோணமலைக் கடலில் வந்து கலக்கும் ஆறு

________________________.

(களனி, பாலாவி, மகாவலி)

17. சிங்கத்தை அழிக்கத் திட்டம் போட்ட

விலங்கு ________________________.

(மான், முயல், நரி)

18. முக்கனிகளும் முழுப் பயன் தருகிற காலம்,

( ஆடி, ஆவணி, வைகாசி)

19. பள்ளி + பாடம் என்பதைச் சேர்த்து எழுதினால்

(பள்ளிபாடம், பள்ளிப்பாடம், பள்ளிற்பாடம்)

20. தவறு செய்யும் போது கண்டித்து ________________________

உரைப்பவரே நல்ல நண்பர்.

(பொய், தீமை, அறிவு)

21. விளையாட்டுகள் ________________________ வளர்க்கும்.

(வேற்றுமையை, பொறாமையை, ஒற்றுமையை)

22. சிறுவர் ஊஞ்சல் ஆட ஆலமரத்தின்

________________________ உதவும்.

(வேர், விழுது, இலை)

23. தோண்டத் தோண்ட ஊறுவது ________________________.

(ஆறு, கேணி, கடல்)

24. தோற்கருவிகளுள் ஒன்று ______________________.

(குழல், வீணை, மேளம்)

25. நான் தமிழ்மொழித் தேர்வு செய்து கொண்டிருக்கிறேன்.

______________________ என்னால் வெளியே செல்ல முடியாது.

(இப்பொழுது, அப்பொழுது, எப்பொழுது)

26. இரசச் சரக்குகளில் ஒன்று ______________________.

(ஓமம், கராம்பு, மல்லி)

27. பாலிலுள்ள நீர்த்தன்மையைப் பிரித்துப் பாலை மட்டும் பருகும்

பறவை ______________________.

(மயில், அன்னம், கொக்கு)

28. நீரிலும் நிலத்திலும் வாழும் உயிரி ______________________.

(ஆமை, மீன், இறால்)

29. உடுக்கை என்றால் ______________________.

(ஆடை, விண்மீன், மேளம்)

30. கன்னியாய் வெந்நீர்க் கிணறுகள் ______________________.

(ஏழு, ஆறு, எட்டு)

புள்ளிகள் 30

2) கீழே தரப்பட்டுள்ள சொல்லியங்களில் கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.

| | | |
|---|---|---|
| சுடச்சுட | சாரிசாரியாக | குடுகுடு |
| கடகட | கலீர்கலீர் | |

1. பாட்டி ______________________ என நடந்து சென்றார்.

2. எழிலன் ______________________த் தேநீர் அருந்தினான்.

3. சலங்கை ஒலி ______________________ எனக் கேட்டது.

4. குதிரை வண்டி கற்பாதையில் ______________________ என ஓடியது.

5. எறும்புகள் ______________________ ஊர்ந்து சென்றன.

புள்ளிகள் 05

3) மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி, கருத்துள்ள சொல்லியமாக்குக.

1. முத்தமிழ் / சிறப்பித்துக் / தமிழை / கூறுவர் / எனச்

______________________________

______________________________

2. நானிலங்களைக் / பட்டினமாகும் / திருகோணமலை / கொண்ட

______________________________

______________________________

3. ஔவையாருக்குக் / கொடுத்தான் / அதியமான் / நெல்லிக்கனியை

______________________________

______________________________

4. அறியலாம் / நண்பனை / அன்பான / இடுக்கணில்

______________________________

______________________________

5. காலிக்கும் / காலையில் / கதிரவன்

______________________________

______________________________

| புள்ளிகள் 05 |
|---|

**4) கீறிட்ட இடங்களில் பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி; சொல்லியங்களை நிறைவு செய்க.**

1. தாயகத்தில் தமிழர் படும் பாட்டை நினைக்கக் கவலையாக

   ______________________________.

2. மாதவியால் நடனம் ______________________________.

3. எல்லாளன் நாற்பத்துநான்கு ஆண்டுகள் ஆட்சி

   ______________________________.

4. அறிஞருடன் சேர்ந்தால் அறிவைப் ______________________________.

5. நாம் ஒருவர் செய்த உதவியை மறக்கக்

   ______________________________ .

| புள்ளிகள் 10 |
|---|

5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆசிரியர்களும் | | கிளித்தட்டு | | மகிழ்ச்சி | |
| நற்பண்புகளை | | | விளையாட்டுப் | | |

நாளை எமது பள்ளியில் ______________________ போட்டி.

மாணவர்களுக்கு ஒரே ______________________. விளையாட்டுப்

போட்டிக்காக ______________________ மாணவர்களும் அணியம்

செய்கின்றனர். போட்டியில் ______________________,

உதைபந்தாட்டம், ஓட்டப்போட்டி போன்ற விளையாட்டுகள் இடம் பெற

உள்ளன. விளையாட்டுகள் ______________________

வளர்க்கின்றன.

புள்ளிகள் 10

6) கீழேயுள்ள பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

பனைமரம் யாழ்ப்பாணத்தில் கூடுதலாகக் காணப்படும். இது மிக உயரமாக வளரும். இதற்குக் கிளைகள் இல்லை. பனைமரத்தின் இலையைப் பனைஓலை என்று அழைப்பர். அதன் மரம், ஓலை போன்றவற்றை வீடு கட்டுவதற்குப் பயன்படுத்துவர். பனையிலிருந்து நுங்கு, பனம்பழம், பதநீர் போன்றவையும் கிடைக்கும். பதநீரில் இருந்து பனங்கட்டி செய்வர். பனையில் இருந்து பல பயன்களைப் பெறலாம். பனையைக் கற்பகதரு என்றும் அழைப்பர்.

1. பனைமரம் எங்கே கூடுதலாகக் காணப்படும்?

________________________________________

________________________________________

2. பனைமரத்தின் இலையை எப்படி அழைப்பர்?

________________________________________

________________________________________

3. பனை மரத்தில் இருந்து கிடைக்கும் இரண்டு பொருட்களின் பெயர்களைத் தருக.

________________________________________

________________________________________

4. எதில் இருந்து பனங்கட்டி செய்வர்?

________________________________________

________________________________________

5. பனை மரத்தை வேறு எப்படி அழைப்பர்?

________________________________________

________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

7) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. தமிழில் உள்ள உயிர் எழுத்துகள் எத்தனை?

______________________________

______________________________

2. சிலப்பதிகாரத்தை எழுதியவர் யார்?

______________________________

______________________________

3. அரசன் படை நடத்திச் செல்லும் போது முழங்கும் முழவு எது?

______________________________

______________________________

4. தமிழரது மரபுவழி விளையாட்டுகளில் ஒன்றைத் தருக.

______________________________

______________________________

5. இராவணனது கொடி எது?

______________________________

______________________________

புள்ளிகள் 10

8) கீழே தரப்பட்டுள்ள சொற்களை உங்கள் வாழிட மொழியில் எழுதுக.

1. அஞ்சல் - ____________________

2. விண்ணூந்து - ____________________


3. நாடு - ____________________

4. ஒட்டகம் - ____________________

5. வகுப்பறை - ____________________

புள்ளிகள் 05

9) தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதை எழுதுக.



புள்ளிகள் 15